பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத வூ புரட்டாதி மீ 10 உ புதன்கிழமை (26 09-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 06 கதிர் 206

# திருமலை நகரத்திலும் சிங்களக் குடியேற்றம்!

## வெகு தீவிரமாக நடக்கிறது

திருகோணமலை, செப். 26

திருகோணமலை மாவட்டத்தில் நகரைச் சூழவுள்ள பகுதிகளில் இடம்பெற்று வந்த சிங்களக் குடியேற்றம் தற்போது நகருக்குள்ளேயும் வெகு தீவிரமாக நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை நகரை முழு சிங்களப் பகுதியாக்கும் முயற்சிகள் திட்டமிட்ட முறையில் நடந்து வருகின்றன என்று அறியவருகிறது.

திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவில், மாரியம்மன் கோவில், வீரபத்திரப் பிள்ளையார் கோவில் என்பவற்றுக்குச் சொந்தமான — பாரம்பரிய — கோவில் காணிகளில் சிறிமாபுரமற்றும் பகுதிகளைச் சேர்ந்த சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

'லவ்லேன்' பகுதியில் உள்ள தமிழர் குடியிருப்புப் பகுதியிலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டுள்ளனர். அந்த இடத்தில் படையினரின் பாதுகாப்புடன் சிங்களக் குடும்பங்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. வி. பியினர் 40 பேர் கைது!

கொழும்பு, செப். 26

மாத்தளை மாவட்டத்தில் உள்ள மலைத் தொடர் ஒன்றை ஒட்டியுள்ள காட்டுப் பகுதியை பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்து, தேடுதல் நடத்தி 40 ஜே. வி. பி. சந்தேக நபர்களைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது.

இவர்களில் ஒன்பது பேர் ஜே. வி. பி இயக்கத்தின் பிரதேசத் தலைவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## காது கேளாத நிலையில் கோட்டைப் பொலீஸார்!

யாழ்ப்பாணம், செப். 26

கோட்டையில் சிக்கிய பொலீஸ்காரர்களில் பலர் தற்போது காது கேளாத மந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்கள் குறித்து அண்மையில் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையிலேயே இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஆகியவற்றினால் கால்களை இழந்து வரும் படையினர், இப்போது புலிகளின் குண்டுச் சத்தங்களினால் காது கேட்காத நிலைக்குத் தளளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## திலீபன் நினைவு தினம் இன்று

யாழ்ப்பாணம், செப் 26

தமிழினத்தின் விடிவுக்காக 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வீரசுவர்க்கமடைந்த தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு நாளான இன்று உணர்ச்சியும், எழுச்சியும் மிகு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 11 நாட்களும் கிராமங்கள் தோறும் மூலை முடுக்கெல்லாம் உணர்ச்சி பூர்வமான உண்ணாவிரதங்கள், அஞ்சலிக் கூட்டங்கள், ரத ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

இறுதி நாளான இன்று காலை 10.48 மணிக்கு சகல மத ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கும். மக்கள் கூடி நின்று மௌன அஞ்சலி செலுத்துவார்கள்.

திலீபன் பிறந்த ஊரான ஊரெழுவில் அமைக்கப்பட்டுள்ள ஞாபகார்த்த ஸ்தூபித் திறப்பு விழாவும், மாபெரும் கூட்டமும் இன்று மாலை 4 மணிக்கு ஊரெழு அம்மன் கோவில் வீதியில் நடைபெறும். [இ-3]

## இரண்டு குடும்பஸ்தர்கள் 6 நாள் உண்ணாவிரதம்

தாளையடி, செப். 26

தியாகி திலீபனின் மூன்றாவது நினைவு தினத்தை ஒட்டி, வடமராட்சி கிழக்கில் இரண்டு இளம் குடும்பஸ்தர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதத்தை ஆரம்பித்த இவர்கள், இன்று அதனை முடிப்பார்கள். கடந்த ஐந்து நாட்களாக அவர்கள் நீராகாரம் மட்டுமே உட்கொண்டு வருகிறார்கள்.

வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளை சிற்றூர் அவைப் பிரிவில், அவ்விடத்தைச் சேர்ந்த திருவாளர்கள், செ. சிவகுருநாதன், வி. மோகனசுந்தரம் ஆகிய இருவருமே இந்த உண்ணா நோன்பில் குதித்துள்ளார்கள்.

இந்த உண்ணா விரதத்தில் அப்பகுதி மக்களும் சுழற்சி முறையில் தினந்தோறும் கலந்துகொள்கிறார்கள். [அ-144]

## "அவ்ரோ" வீசிய வெற்றுச் சாக்குகள்!

யாழ்ப்பாணம், செப். 26

யாழ். கோட்டைக்குள் உணவுப் பொதிகளையும் குடியிருப்புக்கள் மீது குண்டுகளையும் வீசிவந்த அவ்ரோ விமானம் நேற்று நகரப்பகுதியில் வெற்றுச் சாக்குகளையும் வீசியது!

நேற்று மாலை 4.15 மணியளவில் இந்த சாக்கு வீச்சு இடம்பெற்றது.

யாழ் கோட்டைக்குள் பொதிகளை வீசும் பணியில் ஈடுபட்டிருந்த அவ்ரோ விமானமே சாக்குப் பொதி ஒன்றையும் வீசியது.

விமானத்திலிருந்து வீசப்பட்ட உடனேயே சாக்குப் பொதி பிரிந்ததால் அதிலிருந்த சாக்குகள் நாலாபுறமும் சிதறி வானத்தில் மிதந்து பறந்து வந்தன.

அந்தச் சாக்குகளில் சில நகரை அண்டி நாவலர் வீதிப் பக்கமாக உள்ள வீடுகள் சிலவற்றிலும் வீழ்ந்தன.

## கல்லூரி சேதம்

யாழ்ப்பாணம், செப். 26

நேற்றுக் காலை 10 30 மணி அளவில் கடலில் இருந்து ஏவப்பட்ட பீரங்கி ஷெல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிப் பகுதியில் விழுந்துவெடித்தது. இதனால் அக்கல்லூரியின்குசினிப்பகுதி சேதமடைந்தது. (இ-3)

## சிகிச்சை நிலையமும் சேதம்

யாழ்ப்பாணம், செப். 26

கடற் படையினரின் பீரங்கி ஷெல்லினால் பாசையூர் திருச்சிலுவை சுகநல சேவை நிலையமும் அதற்கு சமீபமாக உள்ள தேவாலயம் ஒன்றும் சிறிது சேதம் அடைந்தன. [இ 3]

## ஷெல்லினால் வீடு சேதம்

யாழ்ப்பாணம், செப் 26

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று கச்சேரியடி சேமசுந்தரம் அவனியுவில் வீழ்ந்து வெடித்தது.

அந்த வீதியில் ரயில்வே கடவைக்கு அருகில் உள்ள வீடு ஒன்று சிறிது சேதமடைந்தது. [இ-3]

## இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், செப். 26

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் உள்ள இராணுவ முகாமில் வைத்து மனோகரன் என்ற தமிழ் இளைஞர் கடந்த ஞாயிறன்று சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கடற்படை படகு மீது பாஷையூரில் தாக்குதல்!

நேற்றுக்காலை 10 மணியளவில் பாஷையூர் கடற்பகுதியில் கரைக்குச் சமீபமாக வந்த கடற்படைப் படகுமீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். அதனையடுத்து படகு பின் வாங்கிச் சென்றது.

குருநகர் தொடர்மாடிக்குச் சமீபமாக வந்த கடற்படைப்படகு கரையை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து படகு பின்வாங்கிச் சென்று கடலில் தூரத்தில் நின்று சுமார் அரைமணி நேரம் கரையை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

இந்த மோதல் சம்பவத்துக்கு சற்று நேரத்துக்கு முன்னர் ஹெலி ஒன்று அந்தப் பகுதியை வட்டமிட்டுச் சென்றது. (உ-3)

## தம்பிலுவிலில் கைதான 50 தமிழர்களும் எங்கே?

கடந்த ஞாயிறன்று கிழக்கு மாகாணம் தம்பிலுவில் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்து சுமார் 50தமிழர்களைக் கைது செய்து தம்முடன் கொண்டு சென்றனர்,

கைதானோருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி இதுவரை தகவல் ஏதும் தெரியவரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## இராணுவ அணியின் மீது பாவற்குளத்தில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப் 26

வவுனியா பாவற்குளம் முதலாம் யுனிற் இராணுவ முகாமிலிருந்து வெளியேறி அருகில் உள்ள சிறிய மலைப் பகுதிக்குச் சென்ற இராணுவ அணியை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்கினர்.

நேற்றுக் காலை 7-30 மணிக்கு நடந்த இந்த மோதல் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நகரை அண்டியோருக்கு திங்கள் இரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், செப். 26

கடந்த திங்கட்கிழமை இரவு நகரை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு மற்றும் ஓர் பயங்கர இரவாக அமைந்திருந்தது.

இரவு 11 மணி முதல் காதைப் பிளந்து, இதயத்தைக் குலுக்கும் பயங்கரச் சத்தத்துடன் படைக் கலன்கள் மக்களைப் பதற வைத்தன.

பலரும் எப்போது என்ன நடக்குமோ என்ற பதற்றத்துடனும், பயத்துடனும் நித்திரையில்லாது இரவைக் கழித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ், ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) விற்பனைக்குண்டு. Fudo EnterPrises, (Siva Studio Upstair) பிரதான வீதி, மானிப்பாய் (Bank அருகாமையில்) [சி-5220]

மிளகாய்த்தூள், மஞ்சள் மா, புளுக்கொடியல் மா, உழுந்து மா, லூசாகவும், பக்கட்டாகவும் பெற்றுக் கொள்ள அண்ணா கோப்பிக் கடை திருநெல்வேலி. [கி-5214]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Siva Studio மேல்மாடி) (சி-5219)

### நவராத்திரி

ஒன்பது சைவப் பேரறிஞர்களின் ஆக்கங்களும் நவராத்திரிப் பாடல்களும் அடங்கிய அழகிய கை நூல் விலை ரூபா 15/- மட்டுமே. புத்தகசாலைகளிலும் மன்றங்களிலும் கிடைக்கும். வெளியீடு யா/கல்வயல், இந்து இளைஞர் மன்றம். [14325]

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளை பெற்றுக் கொள்ள கிளீன்கட், 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் வேலை நேரம்: 10 மணி முதல் 3 மணி வரை. (சி/5218)

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும். மூலதார பொருட்கள் அரைத்து கொடுக்கப்படும். எம்மிடம் சண்டல் பட்டை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம் சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14247]

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல பணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. [14313]

## திறப்பு விழா

உரும்பராய், செப். 26

தியாகி திலீபன், கப்டன் அக்காய்ச்சி ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயம் இன்று புதன் கிழமைமாலை 5 மணியளவில் ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் திறந்து வைக்கப்படும் இதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். [இ]

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் 95/2, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த பிறிமா கால்நடை உணவு விநியோகஸ்தர்களான நொதேர்ன் ரேடர்ஸ் ஸ்தாபனம் தற்பொழுது

**43/2, மணல் தரை லேனில் இயங்குகின்றது**

என்பதனை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மிடம் சகல கால் நடை உணவுகளையும் பிறிமா உணவு வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

## நொதேர்ண் ரேடேர்ஸ்

[14318]

## முன்றாம் ஆண்டு நினைவாக

### லெப். கேணல் தியாகி திலீபனின்

**ஈழத்துக் காந்தி திலீபன்** தமிழீழ மண் மீட்பிற்காகவும், அகிம்சைப் போராட்டத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும், தன் உயிரிலும் மேலாகத் தன் இனத்தின் விடிவிற்காக நீராகார மற்ற உண்ணா நோன்பிருந்து தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்ட ஈழத்துக் காந்தி எங்கள் தியாக தீபம் திலீபனே உன் நாமத்தை நாம் மறவோம்.

கொழும்புத்துறை சிற்றூரவையும்,
பொதுமக்களும்.

[14329]

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



### பி. எஸ். இராஜகோபால்பிள்ளை

அமரரான பழ பெரும் தவில் வித்துவான் பி எஸ். இராஜகோபால்பிள்ளையின் அந்தியேட்டிக்கிரியைகள் 27 - 9 - 90 ல் (வியாழன்) உரும்பராயில் நடைபெறும். அத்தருணம் உற்றார். உறவினர், கலா அபிமானிகள் யாவரும் கலந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாதஸ்வர வித்துவான்
பி.எஸ். ஆறுமுகம்பிள்ளையும்,
பிள்ளைகளும்,

இராஜ வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய் (14321)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1971 - 06 - 25

●

மறைவு:
1990 - 08 - 27

### செல்லப்பா குலேந்திரன்

எமையெல்லாம் ஆறாத்துயர் கொள்ள வைத்து மீளாத் துயில் கொண்டீரோ உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் நாளும் துயருறும்:
அன்புப் பெற்றோர்கள், சகோதரர்கள்,
சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

243. காரைநகர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். [14320]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

27 - 09 - 90 வியாழக்கிழமை மு. ப 9 00 மணிக்கு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் (M. O H P H I. P. H M, Clerk, R H. A, P. P. H M, S. P. H. M M, & S. P H I.) கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள எமது பணிமனையில் நடைபெறும் மாதாந்தக் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் அத்துடன் இக் கூட்டத்தில் மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளும்; (D/. P F. D. I, S P. H. I D, D. R. M. P; O/C D. D S) முதலானோரும் பங்கு பற்றுமாறு வேண்டுகின்றேன்.

ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம். சி-5216]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. கனகராஜா கதிரமலை

[சர்வோதய வடபிராந்திய வெளிக்கள இயக்குநர்]

தோற்றம்; 05- 08- 1953 மறைவு: 26- 09- 1986

சேவைக்கு ஒரு தலைவன் செல்வத் திருமகனார்
ஈழத் தமிழ் போற்ற இன்னல் களைந் தெறிந்த
காணக் கிடைக்காத திரு. கதிரமலை அண்ணன் இன்று
மீளா உலகடைந்து முடிந்ததே நான்கு ஆண்டு
ஆண்டுகள் மறைந்தாலும் மறையாது அவன்
செய்த சேவை
காலன் அவன் கருணை இன்று கண்நிறைந்த
துணைவியுடன்
அவன் பெற்றோரையும் பறித்த பின்பும்
நற்சேவை செய்த
நல்ல புகழ் கதிரமலையின் முத்தான சேவை வாழ்க.

வடபிராந்திய தொண்டர்கள்,
சர்வோதயம். (14331

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி தயாபரன் பவானி

பிறந்த திகதி: 01 — 05 — 1932 மறைவு: 26 — 08 — 1990

காவலூரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வேலணை மேற்கு, வேலணை 8 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் தனது ஒரே மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த போது ஹெலியினால் 24 - 08 - 1990 அன்று தாக்கப்பட்டு 26 - 08 - 1990 மானிப்பாய் மருத்துவ மனையில் மரணமடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
கணவன், மகள் திவியா,
பெற்றோர், மாமன், மாமி,
சகோதரர், மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

தகவல்: இ. தயாபரன்
ஆசிரியர் கிளி / பூநகரி ம. வி.

[143[illegible]]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. விஜயக்குமார் முத்துக்குமாரு

பிறப்பு: 19 - 03 - 1941 இறப்பு: 26 - 09 - 1988

அன்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கு ஒளி வீசிவிட்டு அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே ஈராண்டு சென்றாலும் உங்களை பிரிந்த துயர் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்!
அன்பு மனைவி - நிர்மலக்கரசி
அருமை மகன் - நிரோஸ்குமார்
உற்றார், உறவினர்.

15, சந்தானமாதா கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [14183]

## தேச பிதாவே உங்களுக்கு தெரியுமா?

தேசபிதாவே!
பாரதத்தின்
தேசபிதாவே!
எங்கள் ஊர்
திலீபனை
உங்களுக்குத்
தெரியுமா......?

உங்களது
உண்ணாவிரதம் ...
உன்னதம் நிறைந்தது......
இருபத்தியொரு நாள்
நீரை மட்டும்
அருந்தியபடி
நீங்கள் இருந்தீர்கள்!
உங்களது போராட்டம்
மனிதத்துடன்
நிகழ்ந்ததினால்
வெற்றியும்
பெற்றீர்கள்!

நாங்கள்
மோதியது
யாருடன்?
உங்களது
பெயரை
வைத்திருப்பவர்கள்
உங்களுக்கு
களங்கத்தை
ஏற்படுத்தி விட்டார்களே!
உங்களது
அருகிலிருக்கும்
இந்திரா பிரியதர்சினியிடமும்
தேச விடுதலை வீரர்களிடம்
கூறுங்கள்
திலீபன்
மட்டுமே
எனது பெயரை
வைக்கும்
தகுதியுடையவன்
என்று......!
தண்ணீர் கூட
அருந்தாது
தியாகியாகிவிட்ட
அந்தச்
சிறுகொழுந்து
பன்னிரு நாட்கள்
உங்களைக் காண்பதற்காய்
நல்லூர்...... வீதியில்
காத்துக் கிடந்தது
பொட்டி ராமுலு
சங்கரலிங்கம்
பொபிசாண்டஸ்
என்பவர்களையும்
விடவும்
இவனது
தியாகம்
பெறுமதியானதும்
அளப்பரியதும்
என்று
அவர்களிடம்
கூறுங்கள் ★



## திவ்விய தியாகம்

செந்தமிழ் திலீபன்
பைந்தமிழ் தலைவன்
தமிழீழம் காக்க
தம்மையே ஈயும்
படையதனில் இணைந்து
படைத்தனன் தியாகம்
அகிம்சைப் போர் தொடுத்த
அகிலத்தில் ஒரு தியாகியே
தியாகத்தில் திவ்வியம்
திலீபா உன் தியாகம்
இறுதி மூச்சு வரை
இருந்தாய் உண்ணாமல்
இறுதி வார்த்தையிலும்
இருத்தினாய் கொள்கையை
காந்தியின் பாதையதனில்
காவியம் படைத்தவனே
ஈழமும் உன் புகழ்
காலமெல்லாம்
தியாகியென்று
செலுத்துவோம் செம்மலே
உனக்கு
சென்ற மூன்றாண்டு
அஞ்சலியை!



"புரந் தார் கண் நீர் மல்கச் சாகிற்பின்
-சாக்காடு
இரந்து கோள் தக்க துடைத்து"
—குறள்

(தன்னைத் தாங்கும் தலைவனும், தன்னயலில் பார்த்து நிற்பவகர்ளும் கலங்கிக் கண்ணீர் விடும்படி ஒரு வீரன் தன் இன்னுயிரை ஒரு சிறந்த குறிக்கோளுக்காக ஈவானேயானால், அத்தகைய சாவு இரந்தாயினும் தவஞ் செய்தாயினும் பெறத்தக்கதே)

*தியாக வேள்வியில் உயிர் நீத்த தொண்டன் திலீபனுக்கு தலைவர் வே. பிரபாகரன் மௌனாஞ்சலி செலுத்தும் காட்சி.*

# உரிமைகளை வென்றெடுப்பதே திலீபனுக்கு செய்யும் கைமாறு

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது.

இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள்.

ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது!

சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலி கொடுத்து ஈடுஇணையற்றஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான்.

அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி; தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

"திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது.



தியாக தீபம் திலீபன் வீர சுவர்க்கம் அடைந்ததை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே பிரபாகரன் அன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மக்களை போராட்டத்துக்கு அணி திரள வைக்க விடுக்கப்பட்ட அறைகூவலாகவும் அது அமைந்தது அந்த அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.


திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காகத் தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனல் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஓர் இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்கு உண்டு. அவன் துடிதுடித்து செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண பனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை

[4 ஆம் பக்கம் பார்க்க]



கூடியிருந்தோர் கண்ணீர் மல்க நிற்க உண்ணாவிரத மேடையில் திலீபன் இறுதியுரை நிகழ்த்தும் காட்சி.

## தேசத்தின் நாயகன்!

காலத்தால்
அழியாத்
காவியம்
படைத்தே—
எக்காலமும்
உனக்காகவே
நினைவுகள்
நிஜமாகின்றன...

— ● —

தேசத்தின்
நாயகனாய்
தெருவெல்லாம்
பூரண கும்பமாய்...
காற்றுக்கூட
உன் பெயரை
காலமெல்லாம்
இசைக்கின்றது...

— ● —

விளக்கில்லா
எங்கள்
இருண்ட
வாழ்வதனில்
தீச்சுடராய்
நீ - எழுந்தே ...
தேசத்தின்
இருட்சியதனை
நீ அகற்றினாய்

— ● —

அலைகள்
முட்டிய
கரைகள்
எல்லாம் - உன்
நிஜமரணத்தால்
கரைகளும்
அலையைத் தேடிச்
செல்கின்றன ...

— ● —

வீசுங்காற்று
ஓர் கணம்
மரணித்து
நிற்கையில்
உன் ஜீவன்
எங்கள்
நெஞ்சினில்
பதிந்து நின்றது...
அக்கணம் -
ஈழமே
சோகத்தில்
மிதந்தது...

— ● —

தியாக
வேள்வியில்
ஆகுதியாய்
ஆன வீரனே ...
உன்
நீண்ட
கனவுகள்
என்றாவது
ஓர் நாள் - நனவாய்
ஜனனிக்கும்

— ● —

காக்கும்
நிலைக்கு
உயிராகி ...
காற்றோடு
காற்றாகக்
கலந்தவனே
உன்
காலடிகள்
ஈழ மண்ணில்
தொடர்கின்றன ...

— ● —

தியாகச்
செம்மலாய்
திக்குகள்
எங்கெனும்
சுடர்
பரப்பியவனே ...
இன்று
உன் —
பாதச்சுவடுகளின்
பின்னே
ஈழ மக்கள்
அலை அலையாய்
அணிதிரள்கின்றனர் ...

— ● —

காவியம்
சொல்லும்
கதைகளில்
கூட - உன்
காலமும்
அழியாத
நாமம்
நிலைத்தே
நிற்கும ......

— ● —

— யுககவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தொழிலாளருக்கு விசேஷ அடையாள அட்டை

கொழும்பு. செப். 26 மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்க வேண்டும்என்றுகைத்தொழில் துணை அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி அரசாங்கத்தை கேட்டிருக்கிறார். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா செல்லையா

வட்டுக்கோட் டையைச் சேர்ந்த திருமதி தங்கம்மா செல்லையா அவர்கள் சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற Rawang வேலுப்பிள்ளை தம்பதியினரின் மகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 03-09-90 அன்று புத்தளம் பிரதம தபாலதிபர் கே. ரி. மூர்த்தி (மருமான்) இன் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. த யோகராஜா [மருமகன்]
82/3, சச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். [14319]

## திருமதி ருக்மணி குமாரசாமி

திருமதி ருக்மணி குமாரசாமி 20 - 09 - 90 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற நீர்ப்பாசன பொறியியலாளர் வினாசித்தம்பி குமாரசாமியின் மனைவியும், காலஞ் சென்ற பரமேஸ்வரி, புஸ்பவதி, புவனேஸ்வரி மகேந்திரன், விஜேந்திரன், பத்மாவதி, சிவேந்திரன் ஆகியோரின் தாயாரும், காலஞ் சென்ற அல்பிரட்துரையப்பா, சோமாஸ்கந்தன், பத்மநாதன், உஷா, சியாமளா, விமல் சொக்கநாதன், இந்திரகாந்தி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களாகிய ஜீ ஜீ பொன்னம்பலம், திருமதி ஸ்பென்சர் இராசரெத்தினம் அதிவணபிதா பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 09 - 90 அன்று நடைபெற்றது.

தகவல்:
சோமாஸ்கந்தன்
22/2, விதானை வீதி,
சுண்டிக்குளி. [14312]

## சின்னத்துரை சிவஞானமூர்த்தி

சின்னத்துரை சிவஞானமூர்த்தி (வாழைச்சேனை Kuba Builders Ltd) 14-9-90 அகாலமரணமானார். அன்னார் கல்கமுவா, யாழ்ப்பாணம், காரைநகர் முன்னாள் பிரபல வர்த்தகர் திரு வேலுப்பிள்ளை சின்னத்துரை, திருமதி சின்னத்துரை செல்லம்மாவின் அன்பு மகனும், திருஞானசம்பந்தன், சிவதேவி, சாரதாதேவியின்அன்புச் சகோதரரும், அருட்சோதியின் மைத்துனரும், துஷ்யந்தனின் மாமனுமாவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அருசம்புலம்,
காரைநகர்.
தகவல்:
ஆ வே. சின்னத்துரை
(14322)

## திருமதி மாலினி நாகேஸ்வரன்

[உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை]

உடுப்பிட்டி இமையாணன் வடக்கைச் சேர்ந்த திருமதி மாலினி நாகேஸ்வரன் 11-09-90இல் காலமானார். இவர் வேலுப்பிள்ளை நாகேஸ்வரன் (நிலஅளவை வேற்றுப் பொறியியலாளர் - புத்தளம்) அவர்களின் அன்பு மனைவியும், கார்த்திகா, மீரா ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராஜா (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளர்-சுன்னாகம்) தவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், மஞ்சுளா (லண்டன்), ரஞ்சன் (கனடா), திருமதி அனுசுயா நாகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலுப்பிள்ளை யசோதையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், முருகேசு (இலங்கை மின்சாரசபை - வவுனியா) அவர்களின் பெறாமகளும் தம்பிராசா (B Sc ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை), சுசிலாதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும், நாகேஸ்வரியின் மைத்துனியும், யசோதரன், கஜேந்திரன், சுவேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவபாதசுந்தரம் (இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும், செல்வராசா (உதவிப் பணிப்பாளர் நீர்ப்பாசனத் திணைக்களம்-கொழும்பு) பிரியா தம்பதியினரின் பெறாமகளும், மது, லதா, சுதா ஆகியோரின் சகோதரியும், கண்ணன் (லண்டன்), மோகன் (பொறியியல் மாணவன் கட்டுப்பத்தை), நாகநாதன் (கனடா), சிவகுமார் [லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனியும், சிவபாக்யம், தனபாக்கியம், சின்னமணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் பேத்தியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-09 90இல் எள்ளங்குளம் மயானத்தில் நடைபெற்றது

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.
தகவல்;
த. தம்பிராசா
க. சிவபாதசுந்தரம்
[C/5215]

# உரிமைகளை ....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எரித்துக் கொண்டிருக்கும் ஓர் இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமைகொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக் கட்டமான திலீபன் தன்னை அழித்துக் கொண்டான் அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்று புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

### நடந்தது என்ன?

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை. தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவுஎன இந்திய தூதர் கூறியிருக்கிறார் தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர்தப்பியிருப்பார் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? - என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும்; எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப்பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும்; - இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம்; எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதையெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

### திடசங்கற்பம் பூண்ட திலீபன்

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது; சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது; அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது; [சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப்போராடுவதில் அர்த்தமில்லை பாரதம் தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது. பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது, பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவே தான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பிறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்.

### பொய்ப்பிரசாரம்

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்திய தூதர் தி.ந. டிக்ஸிற்றுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசு ஆதிக்கத்தின் [illegible] கள் குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது; திலீபனின் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது.

ஒன்பதாவது நாள் இந்திய தூதர் இங்கு வந்தார் உருப்படியில்லாத உறுதிமொழிகளை தந்தார் வெறும் உறுதி மொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது.

உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள் எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன். உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால் நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளை கூறுங்கள் நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்திய தூதர் மறுத்து விட்டார்.

### நிபந்தனைகளை விதிக்கிறது இந்தியா

எனது அன்பான மக்களே!

இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்திருப்பான். இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகிறது. நாம் கேட்டுக் கொண்டபடி ஓர் இடைக்கால அரசை நிறுவி, இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சிரத்தைகாட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது; எம்மோடு கலந்தாலோசிக்காத ஓர் ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது; இப்போது ஆயுதங்களை ஒப்படைப்புப் பற்றி பேசுகிறது; போராட்டத்தைக் கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறைத் திட்டங்களை கேட்க, இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது; நாம் விளக்கங்களைக் கேட்க, இந்தியா கால அவகாசம் கேட்கிறது; நாம் கோரிக்கைகளை முன்வைக்க, இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது;

இந்தச் சூழ்நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிட முடியாது. மாறாகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சிமாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெறவேண்டும்;

வடக்கு -கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும்; மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே - மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே - நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இது தான். ★

## ரத ஊர்வலம்

நல்லூர், செப். 26

நல்லூரர் வட்டவையினால் நிர்மாணிக்கப்பட்ட திலீபனின் திருவுருவம் தாங்கிய ரதம் கடந்த சனிக்கிழமை அரியாலை மேற்கு சிற்றூரவைப் பகுதி வீதிகளில் வலம் வந்தது. இறுதியில் நல்லூர் வட்டவைத் தலைவர் ப. கணபதிப்பிள்ளை தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. (இ)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழினத்தின் தவப்புதல்வன்
அகிம்சையின் அறப்புதல்வன்
அரசியலின் அரும் புதல்வன்
திலீபனெனும் திருப்புதல்வன்

களத்திலெனும் ஏடு இசைத்தான்
களம் எல்லாம் புரட்சி செய்தான்
தமிழ் தரணியினைச் சேட்ட அவன்
தாயகத்தின் காந்தியானான்

சுதந்திர யாழ் இசைத்தான்
சுதந்திரப் போர் புலியானான்
திருத்தமிழின் உயிரானான்
திலீபன் தியாகியானான்

உரும்பராய் சிற்றூரவைகளும்,
வாழ் மக்களும்

(14327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நினைவுநாளில் நினைவிற் கொள்க!

தியாகி திலீபன் ஈழத் தமிழர்களின் வரலா றாகி மூன்று ஆண்டுகள் இன்று பூர்த்தியாகின்றன.

திலீபன் ஈழத்தமிழர்களின் தியாகச்சுடர் மட்டுமல்ல. உரிமைகளுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த உலக உத்தம தீபங்களின் வரிசையில் வைக்கப்படும் தலைவனுமாகி விட்டவன்

பகத்சிங்கின் தோழரான ஜதீந்திரநாத் தாஸ், ஆந்திராவின் பொட்டி சீராமலு, விருதுநகர் சங்கர லிங்க நாடார், ஐரிஸ் பொபி சாண்ட்ஸ் போன்று திலீப னும் உரிமைக்காக உயிர் நீத்த சரித்திர நாயகன்.

ஈழத்தமிழர்களின் உரி மைப் போராட்ட வரலாற் றில் புது அத்தியாயம் எழுதி யவன் திலீபன்.

சாத்வீகத்தினால் சுதந் திரம் பெற்ற பாரதத்துக்கே, சாத்வீகத்தை மீளப் புகட் டித் தலைகுனிய வைத்த பெருமையும் அவனுக்கு உண்டு. தனது உடல், பொருள், ஆவி அனைத்தை யும் ஈழத்தமிழர் உரிமைப் போருக்காக அர்ப்பணித்த திலீபன், தனது உண்ணா விரதப் போருக்கு அந்நேரத் தில் முன்வைத்த கோரிக்கை கள் ஐந்து.

அவற்றில் ஒன்றைத் தானும் நிறைவேற்றச் சக்தி இல்லாத நிலையில், அன் றைய இந்திய அரசு திலீப னின் உயிர் பிரியக் காரண மாக இருந்தது. அவன் உயிர் துறந்த பின்னர் முப்பது மாதங்கள் தமிழ்ப்பகுதி களில் நிலைகொண்டிருந் தும் கூட இந்தியப்படை யால் - இந்திய அரசால் - திலீபனின் கோரிக்கையில் ஒன்றைத்தானும் நிறைவேற் றிட இயலவில்லை! ஸ்ரீலங்கா அரசு அதற்கு இடம் கொடுக்கவில்லை!!

திலீபன் முன் வைத்த ஐந்து கோரிக்கைகளில் நான்கு இப்போது நிறை வேற்றத் தேவையில் லாதவையாகி விட்டன ஆனால் தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நிறுத் தப்பட வேண்டும் என்ற கோரிக்கை, திலீபன் செத் தும் சாகாத கோரிக்கை யாக, தமிழ் மக்களின் உரி மைப் போராட்டத்தில் முக் கிய கோரிக்கையாக இருந்து வருகிறது.

ஈழத்தமிழர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு. அதனைத் தென்றலாக வீசு வதற்கு ஒரு தாயகம் தேவை. அந்தத் தாயகத்தில் தமிழ ரின் பாதுகாப்புக்கும், ஆட்சி உரிமைக்கும் உறுதி அளிக் கப்பட வேண்டும். - என்ற கோட்பாடே உரிமைப் போராட்டத்தின் முதன் மைக் கரு.

தமிழர் தாயகம் தீண்டப் படாமல் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்ன மும் தீர்க்கப்படாத பிரச்சி னையாகவே இருக்கிறது. வடக்கு - கிழக்கில் திரு கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள் சிங்களவருடைய பாரம் பரிய புகலிடமுமாகும் என்ற நிலைப்பாட்டைத் தென்னி லங்கைத் தலைவர்கள் மாற் றிக் கொள்ள இன்னும் தயாரில்லை

அதனால் தமிழர்கள் தங் கள் தாயகத்தை மீட்க இன் னும் பல தமிழ்த் திலீபன் கள் தேவை. அவனைப் போல மண்ணுக்காகத் தம் மைச் தியாகம் செய்யும் மனோபக்குவம் எல்லோருக் கும் வேண்டும், திலீபனின் நினைவுநாளில் தமிழர்கள் இதனை நினைவில் கொள் ளுதல் அவசியம்.

# மன்னார் பகுதி அகதிமுகாம்களில் மலேரியா நோய் பரவும் ஆபத்து

மன்னார், செப். 26 மன்னார் மாவட்ட அகதி முகாம்களில் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள் ளது.

இப் பிரதேசத்தில் மழை காலம் ஆரம்பமாகியுள்ள தும் அதிகளவிலான அகதி களின் எண்ணிக்கையுமே இதற்குக் காரணம் என அறிய வருகிறது.

குறிப்பாக மடு ஆலயப் பகு தியில் அமைந்துள்ள அகதி முகாம்களைச் சூழவுள்ள பிரதேசங்களிலேயே மலேரியா பரவும் அபாயம் தோன்றி யுள்ளது,

எனினும் மடு ஆலய பங் குத்தந்தை வண பிதா ஜேசுராஜ் எடுத்த முயற்சி யின் பேரில், மன்னார் சுகா தாரத் திணைக்களத்தினர் நோய்த்தடுப்புக்கான நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளனர்.

இது சம்பந்தமாக இந்த முகாமுக்கு நேரடியாக விஜ யம் செய்த பதில் சுகாதார வைத்திய அதிகாரி திரு ஏ. பத்மகேஸ்வரன், மலேரியா தடுப்பு ஊழியர்களைக் கொண்டு அப்பகுதியில் தெளிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மன்னார் தீவுடனான போக்குவரத்து மடுவுக்கிடை யில் துண்டிக்கப்பட்டிருப்ப தால் 'மலத்தியோன்' மருந் தைப் பெறுவதில் தடங்கல் ஏற்பட்டதாகவும் - குழந்தை கள் பாதுகாப்பு நிதியம் மேற் கொண்ட முயற்சியால் அவை மடுப்பகுதிக்கு தருவிக்கப் பட்டு - நோய்த்தடுப்பு நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அறிய வரு கிறது. (இ-6)

# இருபாலையில்

இருபாலை, செப் 26 தியாகச் செம்மல் திலீப னின் நினைவு தினத்தை யொட்டி இருபாலைப் பகுதி யில் ரதபவனியும், அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றன,

இருபாலை வன்னியசிங்கம் சனசமூக நிலையத்தின் முன் பாக இருபாலை கிழக்கு சிற் றாரவையால் இந்த நிகழ்ச்சி கள் ஏற்பாடு செய்யப்பட் டன.

ரதபவனியில் பொது மக் கள் வீடுவீடாக கும்பம் வைத்து அஞ்சலி செலுத் தினர். [இ-3]

# பங்கீட்டு அட்டைகளை உ. அதிபரிடம் உறுதிப்படுத்துக

யாழ்ப்பாணம், செப். 26 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப் பட்டுள்ள பங்கீட்டு அட்டை களை சகலரும் வதிவிட கிராம சேவையாளர்களிடம் சமர்ப் பித்து உதவி அரசாங்க அதி பர்களின் கையொப்பத்தைப் பெறவேண்டும் அப்போதே அது செல்லுபடியாகும்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வாறு அறிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே தத்தம் பகுதிக ளில் வாழும் மக்களுக்கு குடும்பப் பங்கீட்டு அட்டை களை வழங்கியிருந்தன.

ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட இடங்களில் பங்கீட்டு அட்டையைப் பாவித்து உண வுப் பொருள் வாங்குவதைத் தடுக்கும் பொருட்டு, அவற்றை உதவி அரச அதி பர்கள் பதிவு செய்ய வேண் டும் என்ற புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது

புதிய நடைமுறை அடுத்த மாதம் 2 ஆம் திகதி அமு லுக்கு வருவதால் அதற்கு முதல் பங்கீட்டு அட்டைகளில் உதவி அரச அதிபர்களிடம் கையொப்பம் பெறவேண்டும் என்றும் அரச அதிபர் தெரி வித்துள்ளார். [அ-3-5]

## சுகாதார வெளிக்கள ஊழியருக்கு

யாழ்ப்பாணம், செப். 26 கிளிநொச்சி மாவட்ட சுகா தார வைத்திய காரியாலயம் முரசுமோட்டை அரசாங்க வைத்தியசாலையில் இயங்க உள்ளது.

ஆதலால் காரியாலய ஊழி யர்கள் அனைவரையும் இன்று 26ஆம் திகதி முரசு மோட்டை வைத்திய சாலைக்கு சமுகம் தரும்படி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார், (இ-6)

# பார்த்திபன் திலீபனைப் பாடுதும் வம்மின்!



★

உண்ணுநீர் மறுத்து உடல் உயிர் உறைவற்றி
மண்ணுனார் மதிமயங்க மாற்றோர்கள் கதிகலங்க
கண்ணுநீர் வற்றிக் காய்ந்த தமிழீழப்
புண்ணில் புனுகிட்டும் புகழாரம் பூண்டோய்-நீ

★

தன்னுயிர் பேணத் தகாதன செய்யும்
மன்னுயிர் வாழும் மாநில மகனில்
இன்னுயிர் நீத்தும் எம்முயிர் காத்த
இளையோர் பல்லோர் இறவா தவரே

கண்ணீர் வற்றிக் காய்ந்த தமிழனைச்
செந்நீர் பாய்ச்சிய தீரரும் பலரே,
உண்ணீர் மறுத்து உயிரினை நீத்து
மானங் காத்தான் ஒரு மறக்குடி மன்னன்

அவருள் இவனோர் தலைமகன் தமிழன்
யாரென வினவும் பாரெலாம் பரவிப்
புறநானூற்றுக்குப் புத்துரை புனைந்தோன்
அகநானூற்றை அணுகா திருந்தோன்

தாளாண்மை மிக்க தாயின் வயிற்றில்
வேளாண்மை மிக்க வேள்வித் தலைவன்
உற்றான்; உறவினன்; உலவாத் தோழன்
கற்றான்; கல்விப் பயனெலா மொருங்கே

பெற்றான்; பெற்ற பெருந்தவப் புதல்வன்
வன்கண் மறப்போர் அஞ்சா நெஞ்சால்
மென்கண் அறப்போர் ஆற்றிய தலைவன்
காந்தி காட்டிய வழிக்கொரு புதுப்பொருள்

வாழ்ந்து காட்டிய வயதில் இளையவன்
அன்பு வழிக்கெமை ஆற்றுப்படுத்திய
நண்பன்; நல்லூர்க் கந்தன் கழலிணைத்
தண்ணீர் உண்டு தாகந் தணிந்தவன்

சாவை அணைத்துச் சங்கமமாகிச்
சாவை வென்ற சாகாத் தலைவன்
மக்கட் பெருங்கடல் தன்னுள் ஒரு துளி
தானென உணர்ந்து தன்னைக் கரைத்தவன்

பேருக்கும் என் பிறந்த ஊருக்கும்
சிறப்புத்தந்த சிறுமுதுக் குறைவன்
பார்த்திபன் திலீபன் பண்பால் ஊரெழுச்
செம்மண் ஈன்றசெந் தமிழன் தானே

- கலாநிதி வித்துவான் க. ந. வேலன்

## விலை வீழ்ச்சியால்

# தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் ஏமாற்றம்

உரும்பராய், செப். 26 தேங்காய் எண்ணெய்விலை வீழ்ச்சி அடைந்ததால் தேங் காய் எண்ணெய் உற்பத்தி யாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தேங்காய் எண்ணெய் போத்தல் 60 ரூபாவாக விற்ற சமயம் பலரும் இலாபம் கருதி தேங்காயை விற்காது கொப் பராவுக்கு விட்டிருந்தனர்.

இதனால் தேங்காய் விலை சிறிது சிறிதாக உயரத் தொடங்கியது. தற்போது தேங்காய் ஒன்று 10 ரூபா முதல் 12 ரூபா வரை விற் பனை ஆகிறது.

ஆனால் தேங்காய் எண்ணெய் தற்போது போத்தல் 20 ரூபாவுக்கு கீழ் வீழ்ச்சி அடைந்துவிட்டது. உள்ளூரில் பலரும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் ஈடு பட்டதும் வவுனியாவில் இருந்து தேங்காய் எண்ணெய் தாராளமாக வருவதுமே தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சிக்குக் காரணம் ஆகும்.

ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் ஊற்ற ஐந்து தேங்காய்கள் செலவாவதாக வும் கொப்பராவுக்கு விடா மல் தேங்காயாக வைத்திருந் தால் நல்ல இலாபம் சம்பா தித்திருக்கலாம் என்றும் உள் ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் ஒருவர் கவலை தெரிவித்தார். [இ]

# மன்னார் நகரை நோக்கி தள்ளாடியிலிருந்து ஷெல்

மன்னார், செப். 26 தள்ளாடி முகாமில் இருந்து கடந்த ஒருவார காலமாக படையினர் மன்னார் நகரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்துகின்ற னர்.

இதனால் இப்பகுதியில் மீளச்சென்று குடியமர்ந்த மக்கள் திரும்பவும் இடம் பெயரத்தொடங்கியுள்ளனர்.

ஷெல் தாக்குதல்களினால் நகரில் பல கடைகள், வீடு கள் சேதமடைந்துள்ளன. (இ-6)

## இலவச சிகிச்சை

கோண்டாவில் நெட்டிலப் பாய் ஸ்ரீ கணேச சன சமூக நிலையத்தினர் நெட்டிலப் பாயில் ஆங்கிலச் சிகிச்சை நிலையம் ஒன்றைத் திறந்துள் ளனர்.

இலவச சிகிச்சை அளிக்கப் படும் இந்நிலையத்தில் மூன்று நாள் 24 மணி நேர மும் மாறி மாறிக் கடமை புரிகின்றனர். (இ)




திலீபா

காந்திக்கு மேலானவனே
எங்கள் கண்ணுக்கு நிகரானவனே
நீ உயிருடன் இல்லைதான்
எங்கள் உயிர்களில் இருக்கின்றாய்
நீ நாங்களானோம்.

- வர்த்தகர்கள்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி தெற்கு.

[14332]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்காக சமுகமளித்தால் மட்டுமே கஷ்ட நிவாரணப்படி

யாழ்ப்பாணம், செப் 26
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச ஊழியர்கள் ஒழுங்காக கடமைக்கு சமுகமளித்தால் மட்டுமே கஷ்ட நிவாரணப் படியைப் பெறமுடியும்.

மேற்கண்டவாறு கூறு சுற்றுநிருபம் ஒன்று கொழும்பிலிருந்து அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜூன்மாதம் 11 ஆம் திகதியில் இருந்து மூன்றுமாத காலத்துக்கு கஷ்ட நிவாரணப்படி வழங்க பொது நிர்வாக அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும் ஒழுங்காகக் கடமைக்கு சமுகமளிக்கும் அரச ஊழியர்களுக்கு அவரது திணைக்களத் தலைவரின் சிபார்சின் படியே இந்தப்படி வழங்கப்படும்.

ஊழியரின் சம்பளத்தில் 50 வீதம் படியாக வழங்கப்படும். ஆனால் அது 500 ரூபாவுக்கு குறையாது இருக்க வேண்டும் எனத் தெரிக்கப்பட்டுள்ளது (அ-3-5)

# காலம் பிந்திய மருந்து பல இடங்களிலும் விற்பனை

சங்கானை செப். 26
தற்போதைய மருந்துத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சில வியாபாரிகள் பாவனைக்குதவாத காலம் பிந்திய மருந்துவகைகளை விற்பனை செய்கின்றனர். என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

பாவனைக்குரிய காலத் திகதியை அழித்து விட்டு சிலர் பழைய மருந்து வகைகளை விற்பனை செய்யும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இப்படித் திகதி அழிக்கப்பட்ட கண்நோய்க்கான ''ஒயின்மென்ட்'' டை பண்டத்தரிப்புப் பகுதியில் வாங்கிய ஒருவர் விடுதலைப் புலிகளிடம் புகார் செய்துள்ளார்.

குறிப்பிட்ட மாத்திரைகளைக் கேட்டுச் செல்லும் பாவனையாளருக்கு அதற்கு ஒப்பானது என்று கூறி வேறு மாத்திரைகளும் கொடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# அகதிகள் ஓலைக் குடிசைகளில்

மட்டக்களப்பு, செப் 26
மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியால் ஆயிரக்கணக்கான அகதிகள் சிறு ஓலைக் குடிசைகளை அமைத்துத் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இருந்து 42 ஆயிரம் அகதிகள் இந்த முகாமில் தங்கியுள்ளனர்.

இந்த முகாமில் உணவு, வைத்திய, சுகாதார வசதிகள் இன்றி அகதிகள் பெரும் இன்னல்படுகிறார்கள்.

முகாமில் இட நெருக்கடி நிலவுவதால் முகாமைச் சுற்றியுள்ள வெளிப்பகுதியில் சிறு குடிசைகளை அமைத்து அங்கு வசித்து வரும் அவர்கள் அடிப்படை வசதியின்றி இன்னல்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# வந்து சேரும் பொருளுக்கும் பட்டியலுக்கும் வித்தியாசம்

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்கள் அனுப்பியவுடன் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் விவரப் பட்டியலுக்கும், கப்பலில் வரும் பொருள்களுக்கும் வித்தியாசம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கப்பலில் வரும் பொருள்கள் சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சால் யாழ். அரச அதிபருக்கு விவரப்பட்டியல் அனுப்பப்படுகிறது.

கப்பலில் வந்த பொருள்களை கணக்கிட்டால், அதற்கும் அந்தப்பட்டியலுக்கும் வித்தியாசம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே புள்ளி விவரங்களில் மாறுபாடு ஏற்படுவதாகவும், பொருள்களுக்கு பற்றாக் குறை ஏற்படுவதாகவும் யாழ் செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-3-5)


# அரசாங்க அறிவித்தல்

## உணவுப் பங்கீட்டு விநியோகம்

### பொதுமக்களினதும், கிராம சேவையாளர்களினதும் முக்கிய கவனத்துக்கு

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகளைப் பெற்ற சகலரும் தத்தமது நிரந்தர வதிவிட கிராம சேவையாளரிடம் அவ்வட்டைகளைச் சமர்ப்பித்து அப்பிரிவு உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பத்தினை தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுகிறது

உதவி அரசாங்க அதிபரின் கையொப்பத்தினை உடைய பங்கீட்டு அட்டைகளுக்கு மட்டுமே உணவுப் பொருள்கள் பங்கீட்டு முறையில் 02-10-1990க்குப் பின்பு வழங்கப்படும்.

இந் நடைமுறையினை 02-10-1990க்கு முன்பாக நிறைவு செய்யுமாறு எல்லா கிராம சேவையாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அன்ரன் அல்பிரட்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.
24-9-90

[சி-5217]


# அதிபர்கள் ஆசிரியர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம். செப். 26
பளைக் கொத்தணிப் பாடசாலைகளின் அனைத்து மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பற்றிய கருத்தரங்கு நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் பிரதேசப் பொறுப்பாளர் திரு.வ. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

பளை கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (இ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 26
விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# மதுபான சாலைகளை மூடுங்கள்!

யாழ்ப்பாணம், செப் 26
தியாகி திலீபனின் மூன்றாவது நினைவு நாளான இன்று புதன்கிழமை சகல மதுபான சாலைகளையும் மூடுமாறு கேட்கப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரி நிர்வாகச் செயலகத்தினர் இது சம்பந்தமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

தெங்கு-பனம்பொருள் உற்பத்தி, விற்பனவுச் சங்கங்கள் தவறணைகளைத் திறந்து கள்ளைக் கொள்வனவு மட்டும் செய்த பின்னர் நாளை அதனை விற்பனை செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவுக்கு மீண்டும் கப்பலில் உணவுப்பொருள்

யாழ்ப்பாணம், செப். 26
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீண்டும் கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தேவையான உணவுப் பொருள்கள் ''சிகிரியா'' கப்பல் மூலம் அனுப்பப்பட்டு அங்கு இறக்க முடியாத சூழ்நிலையில் பருத்தித்துறைக்கு கொண்டு வரப்பட்டு தீவுப் பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தன.

மீண்டும் எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக 'விங்கோ றேடர்ஸ்' என்னும் கப்பல் மூலமாக உணவுப் பொருள்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்படுகின்றன. (இ-5 3)

# தென்பகுதியில் மீண்டும் படுகொலைகள் அதிகரிப்பு

லண்டன், செப். 26
தென்பகுதியில் மீண்டும் இளைஞர்களைக் கொண்டு சென்று டயர் போட்டு எரிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த சில நாட்களில் மட்டும் 28 சடலங்கள் டயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப் பட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

காவலில் இருந்து விடுதலையாகும் ஜே.வி.பி. சந்தேக நபர்கள் பின்னர் திடீர் திடீரென காணாமல் போவதாகவும் -

அவர்கள் பின்னர் டயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் சடலமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மொஸாட்: விசாரிப்பதற்கு தனிநபர் ஆணைக்குழு

இஸ்ரவேல் உளவு ஸ்தாபனமான மொஸாட் நிறுவனத்தால் இலங்கை ஆயுதப் படையினரோ அல்லது தீவிரவாதக் குழுக்களோ பயிற்சியளிக்கப்பட்டனரா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பிரேமதாஸ தனிநபர் ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

சொலிசிட்டர் ஜெனரல் திரு. எஸ். டபிள்யு பி. வது-கொடப்பிட்டியாவே அந்த தனிநபர் ஆணையாளர் ஆவார்.

மொஸாட்டின் முன்னாள் தலைவரால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றில் இஸ்ரவேல் மொஸாட் நிறுவனம் இலங்கை ஆயுதப்படையினருக்கும் தீவிரவாதக் குழுக்களுக்கும் பயிற்சி அளித்தது என்று கூறப்பட்டிருப்பது தொடர்பாகவே ஜனாதிபதி இந்த ஆணைக்குழுவை நியமித்திருக்கிறார்.

நியமிக்கப்பட்ட தினத்தில் இருந்து வரும் இரண்டு மாத காலத்தினுள் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி ஆணையாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். [அ-எ

# புதுடில்லியில் வன்செயல்; தீக்குளித்தவர் மரணம்

புதுடில்லி, செப். 26
புதுடில்லி தெற்கு பகுதியில் நேற்று வன்செயல்கள் வெடித்தன.

பொலீஸார் இரண்டு இடங்களில் கட்டுக்கடங்காத ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சுட்டனர். அதில் நான்கு பேர் காயமடைந்தனர்.

பிற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் கூடுதல் சலுகை வழங்கும் இந்திய அரசின் முடிவை எதிர்த்து தீக்குளித்த மாணவர்களில் ஒருவரான சௌஹான் நேற்றுக் காலை உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்தே வன்செயல்கள் வெடித்தன.

இதே வேளை—

மற்றும் ஒரு மாணவர் உத்திரப் பிரதேச மாநிலத்தில் நேற்று தீக்குளித்தார். 60 சதவீதமான எரிகாயங்களுக்குள்ளான நிலையில் அம் மாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (அ-எ)

# பிரதம நீதியரசர் மரணம்

லண்டன், செப். 26
இந்திய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதியரசர் திரு முகர்ஜி நேற்று லண்டனில் மாரடைப்பால் காலமானார்.

# தபால் அதிபர்கள்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தபால் அதிபர்கள் அனைவரையும் உடனடியாகத் தன்னை தமது அலுவலகத்தில் சந்திக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-5)

## திருமலை---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குடியேறியுள்ளன.

இதே சமயம்—

திருமலை காளிகோவில் தீர்த்தக்கரையிலும் வசந்த பாடு கரையோரப்பகுதியிலும் 1987 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சிங்களவர்களின் தற்காலிகக் கொட்டகைகள் தற்போது நிரந்தரக் கட்டடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

வீரநகர், வெபுரி, 10ஆம் குறிச்சி, திருக்கடலூர். பள்ளத்தோட்டம், உப்புவெளி ஆகிய பகுதிகளில் இருந்த தமிழர்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்

அந்த இடங்களிலும் சிங்களவரைக் குடியேற்ற அரசு ஆதரவாளர்கள் முனைந்து வருவதாக அறியவருகிறது.

திருமலையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் அங்கிருந்து வெளியேறியிருக்கும் சூழ்நிலையைப் பயன்படுத்தி நகரை சிங்களமயப்படுத்தும் முயற்சியில் முழு அளவில் காரியங்கள் நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'பிரெடரிக்' கோட்டையில் இருந்த சிங்கள அகதிகள் தொடர்ந்து அங்கேயே தங்கியிருப்பதாகவும் –

பிறமாவட்டங்களில் இருந்தே சிங்களவர்கள் கொண்டு வரப்பட்டு நகரில் குவிக்கப்படுவதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (உ-6)

## நகரை---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தனர்.

திங்கட்கிழமை நள்ளிரவு 11.30 மணிமுதல் கோட்டைப் பகுதிகளில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

கடலிலிருந்தும் தரையிலிருந்தும் குடிமனைகளை நோக்கியும் ஷெல் மற்றும் பீரங்கிக் குண்டு வீச்சுகள் மேற்கொள்ளப்பட்டன. நகரை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் பயங்கர இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று.

மோதல்கள் நேற்று அதிகாலையில் ஓரளவு குறைந்ததாயினும், பின்னர் பகல் முழுவதும் விட்டு விட்டு பதற வைக்கும் ஓசையுடன் ஷெல் வீச்சுகள் இடம் பெற்றன.

இதேவேளை நேற்றுமாலையிலும் யாழ் கோட்டையை அண்டிய பகுதிகளில் பொம்மர் மற்றும் அவ்ரோ விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

நேற்று மாலை சுமார் 4மணியளவில் ''அவ்ரோ'' விமானம் கோட்டைப் பகுதியில் பொதிகளைப் போட்டது. அதே விமானம் பின்னர் குண்டு வீச்சிலும் ஈடுபட்டது'

அந்த விமானம் சென்றதும், 2 பொம்மர்களும், பின்னர் அவ்ரோ ஒன்றும் தொடர்ந்து வந்து குண்டுகளை வீசின. (அ-9)

## ராணுவ அணி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வித்தன

கடும் மோதலையடுத்து படையினர் இழப்புகளுடன் பின்வாங்கியதாகவும்-

படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து விவரங்கள் தெரிய வரவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின் போது ஏ.கே எல்.எம்.ஜி - 1, அதற்குரிய ரம் மகஸின் – 1, எல்.எம் ஜி.லிஸ்க் – 200, ரி81 ரக துப்பாக்கி – 1, அதற்குரிய ரவைகள் - 500, ஹெல்மெட் – 1 ஆகியவை விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org